‘மாற்றம், மாற்றம்’ என்று மேடைக்கு மேடை முழங்கிவிட்டு,

# ‘திராவிட மாடல்’ ஆட்சியின் திட்டங்களுக்குப் பெயர் மாற்றுவதுதான் த.வெ.க. அரசின் சாதனையா?

## தி.மு.க. ஐ.டி. விங் கேள்வி!





சென்னை, ஜூலை 11–

‘மாற்றம் மாற்றம்’ என்று மேடைக்கு மேடை முழங்கிவிட்டு, கடைசியில் திராவிட மாடல் ஆட்சியின் திட்டங்களுக்குப் பெயர் மாற்றுவதுதான் த.வெ.க. அரசின் சாதனையா? விடியல் இல்லாத தமிழ்நாடு உணர்ந்த சோபா மாடல் அரசு, பேருந்துகளில் விடியல் என்ற வார்த்தையை நீக்கி இருக்கிறது.

திட்டத்தின் பெயரை மாற்றினால் கொண்டு வந்தவரின் புகழ் மங்கிவிடும் என்று நினைக்கும் மங்குனி முதலமைச்சர் விஜய் அவர்களே சீப்பை ஒளித்து வைத்தால் கல்யாணம் நின்று விடாது. தேர்தல் வாக்குறுதியில் சொன்னபடி தமிழ்நாட்டில் எந்தப் பேருந்தில் ஏறினாலும் பெண்களுக்கு இலவசம் என்று சொன்னீர்களே, அதை நிறைவேற்ற துப்பில்லை, வக்கில்லை. ஆனால், முந்தைய ஆட்சியின் உழைப்புக்கு ஸ்டிக்கர் ஒட்டி, பெயர் பலகையை மாற்றுவதில் மட்டும் த.வெ.க. அரசு படுவேகமாகச் செயல்படுகிறது என தி.மு.க. ஐ.டி.விங் கேள்வி எழுப்பியுள்ளது.

---

சென்னை மாநகராட்சி நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி,

# 100 பள்ளிகளுக்கு பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரங்கள்!

## மேயர் ஆர்.பிரியா வழங்கினார்!



சென்னை, ஜூலை 11–

மேயர் அவர்களின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் இயங்கும் சென்னை மேல்நிலை, உயர்நிலை மற்றும் மையப்பள்ளி என 100 சென்னை பள்ளிகளுக்கு ரூ.22,12,500/- மதிப்பீட்டில் உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரங்களை (Multi Functional Printer) வழங்கும் அடையாளமாக 5 பள்ளிகளின் தலைமையாசிரியர்களுக்கு அச்சுபொறி இயந்திரங்களை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள், நேற்று முன்தினம் (09.07.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்ட ரங்கில் வழங்கினார்.

மேயர் அவர்களின் 2026-27ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பி ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக் குட்பட்ட 35 மேல்நிலைப் பள்ளிகள், 46 உயர் நிலைப்பள்ளிகள், 15 மண்டலங்களில் உள்ள மையப்பள்ளிகள் மற்றும் உயர்கல்விக்கான சிறப்பு பயிற்சி அளிக்கும் 4 வட்டாரப் பள்ளிகள் என மொத்தம் 100 சென்னை பள்ளிகளுக்கு உயர்தர தொழில்நுட்ப வசதியுடன் கூடிய பன்முக செயல்பாட்டு அச்சுப்பொறி இயந்திரங்கள் ரூ.22,12,500/- மதிப்பீட்டில் மேயர் அவர்களால் இன்று சென்னை பள்ளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், அச்சிடுதல் (Print), நகலெடுத்தல் (Copy), ஸ்கேன் செய்தல் (Scan) உள்ளிட்ட பல்வேறு பணிகளை ஒரே கருவி மூலம் மேற்கொண்டு நேரம், செலவுகளை மிச்சப்படுத்த, தகவல் தொழில்நுட்ப வசதி களை மேம்படுத்தி, டிஜிட்டல் கல்வி மற்றும் மின் ஆளுமை (e-Govern ance) நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க, இந்த திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட 100 பள்ளிகளில் கல்வி மற்றும் நிர்வாகப் பணிகள் மேலும் சிறப்பாக தொழில்நுட்ப வசதியுடனும் மேற்கொள்ளப்படுவதற்கு வழி வகுக்கும்.

இந்நிகழ்ச்சியில், மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், இணை ஆணையாளர் (கல்வி) திருமதி க. கற்பகம், நிலைக்குழுத் தலைவர்கள் பாலவாக்கம் த. விசுவநாதன் (கல்வி), இளையஅருணா (நகரமைப்பு), டாக்டர் கோ. சாந்தகுமாரி (பொதுசுகாதாரம்), திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன் (வரி விதிப்பு (ம) நிதி), கல்வி அலுவலர்கள், தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

---

# மணலி செட்டிமேடு பகுதியில் காலிக் குடங்களுடன் சாலை மறியல்!

## குடிநீர் கிடைக்காததால் மக்கள் ஆவேசம்!

மணலி, ஜூலை 11-

மணலி மண்டலத்தில் குடிநீர் கிடைக்காமல் தவித்துவரும் மக்கள், காலி குடங்களுடன் சாலை மறியல் நடத்தினர். சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம் 17 வது வார்டு செட்டிமேடு பகுதியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன.

இங்கு வசிக்கும் மக்களுக்கு குழாய்கள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. கடந்த ஒரு மாதமாக சரியாக குடிநீர் வரவில்லை என்று கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள், தண்ணீர் பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த நிலையில், 100க்கும் மேற்பட்ட பொது மக்கள் நேற்று காலை செட்டிமேடு பிரதான சாலையில் காலி குடங்களுடன் சாலையில் அமர்ந்து மறியல் போராட்டம் நடத்தினர். அப்போது தங்களுக்கு குடிநீர் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோஷம் எழுப்பினர். இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.

இதுகுறித்து தகவல் கிடைத்ததும் மாதவரம் பால்பண்ணை போலீசாரும் குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகளும் வந்து போராட்டக்காரர்களை சமாதானப்படுத்தினர். “பலமுறை புகார் தெரிவித்தும் குடிநீர் பிரச்சினை தீர்க்க நடவடிக்கை எடுக்க வில்லை” என்று பொதுமக்கள் அதிகாரிகளை முற்றுகையிட்டு வாக்குவாதம் செய்தனர். “இது போல் பிரச்சினை இனி வராது” என்று அதிகாரிகள் உறுதி அளித்தனர். இதையடுத்து மறியல் போராட்டத்தை கைவிட்டனர். இதன்காரணமாக சுமார் 3 மணி நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது.

பொதுமக்கள் கூறுகையில்,’’எங்கள் பகுதியில் கடந்த ஒரு மாதமாக சரியாக குடிநீர் வராமல் அவதிக்குள்ளாகி வருகிறோம்.

இதுகுறித்து அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எப்போதாவது ஒருமுறை வரும் குடிநீரில் புழுக்கள் கலந்துவருவதால் அதனை குடிக்கும் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை சளி, இருமல், தலைவலி, காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டு வருகின்றனர்’ என்றனர்.

குடிநீர் வழங்கல் வாரிய அதிகாரிகள் கூறுகையில், “செட்டிமேடு பகுதி மக்களுக்கு நிலத்தடி நீர் வினியோகம் செய்யப்பட்டது. பூமியில் நிலத்தடி நீர் அளவு குறைந்து விட்ட தால் அதற்கு பதிலாக மெட்ரோ வாட்டரை வழங்கினோம். தங்களுக்கு மெட்ரோ வாட்டர் வேண்டாம், நிலத்தடி நீர் தான் வேண்டும் என்று அப்பகுதியை சேர்ந்தவர்கள் கூறு கின்றனர். மெட்ரோ வாட்டரை தடையில்லாமல் வழங்கி வருகிறோம்’ என்றனர்.

---

28 மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு

# தேர்தல் நடத்தாமல் தனிஅதிகாரிகளின் பதவிக் காலம் நீட்டிப்பு!

## உள்ளாட்சித் தேர்தலை நடத்தத் தயங்கும் ‘ரீல்ஸ்’ அரசு!

சென்னை, ஜூலை 11 –

தமிழ்நாட்டில் 28 மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தல் நடத்தாமல் தனி அதிகாரிகளின் பதவி காலத்தை நீட்டித்து தவெக அரசு உத்தரவிட்டுள்ளது.

காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட 28 மாவட்டங்களில் உள்ள ஊராட்சிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளின் பதவிக்காலம் ஏற்கனவே முடிந்துவிட்டது.

தேர்தல் நடைபெறும் வரை தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த நிலையில், தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை அக்டோபர் 19 ஆம் தேதி வரை தவெக அரசு நீட்டித்துள்ளது.

இந்த நீட்டிப்பானது, மாநிலம் முழுவதும் உள்ள 9 ஆயிரத்து 624 கிராமப் பஞ்சாயத்துகள், 314 ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் 28 மாவட்ட பஞ்சாயத்துகளை உள்ளடக்கியது.

28 மாவட்ட ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்தலை நடத்தாமல் த.வெ.க அரசு அஞ்சுகிறது.

---

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னெடுத்த திராவிட மாடல் ஆட்சியால்

# பள்ளிக் கல்வியில் தொடர்ந்து முன்னணி மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது!

## ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகம் அறிவிப்பை சுட்டிக்காட்டி, முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பெருமிதம்!



சென்னை, ஜூலை 11-

ஒன்றிய கல்வி அமைச்சகத்தால் அண்மையில் வெளியிடப்பட்டுள்ள UDISE+ 2025-2026 அறிக்கை, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் செயல்பட்ட ‘திராவிட மாடல்’ அரசால் பள்ளிக்கல்வியில் நிகழ்ந்துள்ள முன்னேற்றங்களை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

கல்விக்கான ஒவ்வொரு திட்டங்களை எந்தளவுக்கு பார்த்துப் பார்த்துச் செய்தாரோ, அதனால் ஏற்பட்டுள்ள பலன்களை புள்ளி விவரங்களோடு இந்த அறிக்கையில் விவரிக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள ஆட்சியாளர்கள் திராவிட மாடல் அரசு செயல்படுத்திய திட்டங்களின் பெயர்களை மாற்றுவதில் கவனம் செலுத்தாமல், தரமான கல்வி அனைவருக்கும் சென்றுசேர திராவிட மாடல் அரசின் தடத்தை பின்பற்றினாலே போதுமானது என்று பள்ளிக் கல்வித் துறை முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவரது அறிக்கை வருமாறு:-

இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட UDISE+ 2025-26 (Unified District Information System for Education Plus) அறிக்கையில், பள்ளிக் கல்வியின் பல்வேறு முக்கியக் குறியீடுகளில் தமிழ்நாடு தொடர்ந்து முன்னணி மாநிலமாகத் திகழ்வது உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாணவர் சேர்க்கை, இடை நிற்றல் குறைவு, ஆசிரியர் எண்ணிக்கை, கல்வி உள்கட்டமைப்பின் பயனுள்ள பயன்பாடு மற்றும் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய கல்வித் தொடர்ச்சி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தமிழ்நாடு தேசிய அளவில் சிறப்பான முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

**கல்வி உள்கட்டமைப்பு வசதி!**

UDISE+ 2025-26 அறிக்கையின்படி தமிழ்நாட்டில் 57,566 பள்ளிகள், 1,24,02,872 மாணவர்கள் மற்றும் 5,69,909 ஆசிரியர்கள் உள்ளனர். மாநிலத்தின் மாணவர்-ஆசிரியர் விகிதம் (PTR) 22:1 ஆக இருந்து, தேசிய சராசரியான 24:1-ஐ விட சிறப்பாக உள்ளது. மேலும், ஒரு பள்ளிக்கு சராசரியாக 215 மாணவர்கள் மற்றும் 10 ஆசிரியர்கள் இருப்பது கல்வி உள்கட்டமைப்பு திறமையாகப் பயன்படுத்தப்பட்டு வருவதை எடுத்துக்காட்டுகிறது.

மாணவர் இடை நிற்றல் விகிதத்தில் தமிழ்நாடு குறிப்பிடத்தக்க சாதனையைப் படைத்துள்ளது. தொடக்க நிலை மற்றும் நடு நிலைப்பள்ளிகள் இடை நிற்றல் 0.0 சதவீதமாக பதிவாகியுள்ளது. இடைநிலைக் கல்வியில் இடை நிற்றல் விகிதம் 6.2 சதவீதம் மட்டுமே ஆகும். இது தேசிய சராசரியான 9.5 சதவீதத்தை விடக் குறிப்பிடத்தக்க அளவில் குறைவாகும்.

மொத்த சேர்க்கை விகி தத்திலும் (Gross Enrolment Ratio - GER) தமிழ்நாடு தேசிய அளவில் முன்னணியில் உள்ளது. தொடக்கநிலையில் 92.2, நடு நிலைப்பள்ளிகள் 95.2, இடைநிலையில் 97.4, மேல்நிலையில் 85.1 எனப் பதிவாகியுள்ளது. குறிப்பாக இடைநிலை மற்றும் மேல்நிலைக் கல்வியில் தேசிய சராசரியை விட மிகவும் உயர்ந்த சேர்க்கை விகிதத்தை தமிழ்நாடு பெற்றுள்ளது.

பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய கல்வித் தொடர்ச்சியிலும் மாநிலம் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. மேல்நிலைக் கல்வியில் மாநிலத்தின் GER 85.1 ஆக உள்ளது. இதனுடன், 2025-26 கல்வியாண்டில் 83,600 மாணவர்கள் பாலிடெக்னிக் கல்வியிலும், 60,355 மாண வர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் (ITI) சேர்ந்துள்ளனர். மொத்தமாக 1,43,955 மாணவர்கள் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்விப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளனர். இது மாணவர்களின் திறன், விருப்பம் மற்றும் வேலைவாய்ப்பு நோக்கங்களை கருத்தில் கொண்டு பல்வேறு கல்விப் பாதைகளை தமிழ்நாடு வெற்றிகரமாக உருவாக்கியிருப்பதை வெளிப்படுத்துகிறது.

**தமிழ்நாட்டில் ஒரு பள்ளிக்கு சராசரி 215 மாணவர்கள்!**

கல்வி உள்கட்டமைப்பின் பயன்பாட்டிலும் தமிழ்நாடு சிறப்பாகத் திகழ்கிறது. தேசிய அளவில் ஒரு பள்ளிக்கு சராசரியாக 169 மாணவர்கள் உள்ள நிலையில், தமிழ்நாட்டில் ஒரு பள்ளிக்கு 215 மாணவர்கள் உள்ளனர். இது பள்ளிக் கல்வி வளங்கள் பயனுள்ள முறையில் பயன்படுத்தப்படுவதையும், கல்வி நிறுவனங்கள் கல்வியியல் ரீதியாக வலுவாக செயல்படுவதையும் காட்டுகிறது.

மேலும், தமிழ்நாட்டில் பள்ளிகளின் கட்டமைப்பும் சமநிலையுடன் அமைந்துள்ளது. மாநிலத்தில் உள்ள பள்ளிகளில் 59.05 சதவீதம் தொடக்கப் பள்ளிகள், 15.87 சதவீதம் நடு நிலைப்பள்ளி கள், 9.42 சதவீதம் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 15.66 சதவீதம் மேல்நிலைப் பள்ளிகள் ஆக உள்ளன. இந்த சமநிலையான அமைப்பு மாணவர்கள் இடையூறு இன்றி அடுத்தடுத்த கல்வி நிலைகளுக்கு முன்னேற உதவுகிறது.

UDISE+ 2025-26 அறிக்கை, பள்ளிக் கல்வியில் தமிழ்நாடு தொடர்ந்து தேசிய அளவில் முன்னோடி மாநிலமாகத் திகழ்வதை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது. பள்ளி இடை நிற்றல் குறைத்தல், மாணவர் சேர்க்கையை உயர்த்தல், போதுமான ஆசிரியர் எண்ணிக்கை உறுதி செய்தல், கல்வி உள்கட்டமைப்பை திறமையாகப் பயன்படுத்துதல் மற்றும் பத்தாம் வகுப்பிற்குப் பிந்தைய பல்வேறு கல்வி வாய்ப்புகளை உருவாக்குதல் ஆகியவற்றில் மாநிலம் சிறப்பான சாதனைகளைப் பதிவு செய்துள்ளது.

**மாணவர்களின் முழுமையான வளர்ச்சி!**

மாணவர்களின் முழுமையான வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு தரமான கல்வி, டிஜிட்டல் கல்வி உள்கட்டமைப்பு, உள்ளடக்கிய கல்வி (Inclusive Education), தொழில்நுட்பத் திறன் மேம்பாடு மற்றும் எதிர்காலத் தேவைகளுக்கேற்ற கற்றல் சூழலை உருவாக்கும் பணிகளில் தமிழ்நாடு அரசு தொடர்ந்து முன்னெடுத்து வரும் முயற்சிகளுக்கு UDISE+ 2025-26 அறிக்கை வலுவான அங்கீகாரமாக அமைந்துள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அறிக்கையில் பெருமிதத்துடன் குறி ப்பிட்டுள்ளார்.

---

மாவட்டக் கழகச் செயலாளர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமையில் –கொளத்தூர் கிழக்குப் பகுதி

# 68 (அ) வட்டக் கழகச் செயலாளர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் இல்லத் திருமண வரவேற்பு விழா!

## ஆர்.எஸ்.பாரதி - சா.சி.சிவசங்கர் - எஸ்.ஜெகத்ரட்சகன் - கலாநிதி வீராசாமி - இரா.கிரிராஜன் - ப.ரங்கநாதன் பங்கேற்பு!



சென்னை, ஜூலை. 11

தமிழ்நாடு முன்னாள் முதலமைச்சர், கழகத் தலைவர் மற்றும் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர், கழக இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் நல்வாழ்த்துக்களுடன், சென்னை கிழக்கு மாவட்டம், கொளத்தூர் கிழக்குப் பகுதி, 68 (அ) வட்டக் கழகச் செயலாளரும், மாநகரப் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்ற சங்கத் தலைவர் பி.டி.சி.ரவி (எ) எஸ்.சிவக்குமார் எஸ்.ஆனந்தி ஆகியோரின் புதல்வர் டாக்டர் எஸ்.சபரிவாசனுக்கும், மதுரை மாவட்டம், கோ.வீரபத்திரன் – கோ.பார்வதி (எ) பவானி ஆகியோரின் புதல்வி டாக்டர் வி.கார்த்திகாராஜம் ஆகியோரின் திருமண வரவேற்பு விழா இன்று (11.7.2026 – சனிக்கிழமை) மாலை 6.30 மணிக்கும், மணவிழா நாளை (12.07.2026 – ஞாயிற்றுக்கிழமை) காலை 9 மணிக்கு மேல், சென்னை, ஜி.கே.எம்.காலனி, பேரறிஞர் அண்ணா திருமண மாளிகையில் நடைபெறுகிறது.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், முன்னாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

கழக அயலக அணித் தலைவர் டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி, கழக சட்டத் திருத்தக் குழுச் செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ப.ரங்கநாதன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கொளத்தூர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஐ.சி.எப்.வ. முரளிதரன், கொளத்தூர் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எ.நாகராசன் எம்.சி,கே.சந்துரு, தேவஜவகர், சி.மகேஷ்குமார், எஸ்.பன்னீர்செல்வம் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இவ்விழாவில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, சா.சி.சிவசங்கர் எம்.எல்.ஏ எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி, டி.கே.எஸ்.இளங்கோவன், அன்பகம் கலை, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ, பா.தாயகம் கவி, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தயாநிதி மாறன் எம்.பி, கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் எம்.எல்.ஏ., பி.வில்சன் எம்.பி, முனைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ, மேயர் பிரியா ராஜன், மாதவரம் எஸ்.சுதர்சனம், நே.சிற்றரசு எம்.சி, பி.டி.சி.செல்வராஜ், ஆர்.பத்மநாபன், பூச்சி எஸ்.முருகன், துறைமுகம் காஜா, பொன்.தனபால்,

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், எம்.கே.மோகன், கே.எஸ்.இரவிச்சந்திரன், ஜோசப் சாமுவேல் மற்றும் குமரி விஜயா, பி.கே.மூர்த்தி எம்.சி, கார்த்திக் மோகன், தமிழன் பிரசன்னா, சங்கரி நாராயணன், கே.எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார், பரிதி இளம் சுருதி எம்.சி, ஆர்.வரதன், பி.டி.சி. வெ.பாலு, கே.ராஜா குப்புசாமி, கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், புனிதவதி எத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, கூ.பீ.ஜெயின் எம்.சி, பா.ஸ்ரீராமலு எம்.சி, டாக்டர் சாந்தகுமாரி எம்.சி, வே.வாசு, எம்.சாமிகண்ணு, செ.தமிழ்வேந்தன், டி.எஸ்.பி.இராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், லயன் பி.உதயசங்கர், பி.ஜெ.துளசிங்கம், டி.வி.செம்மொழி எம்.சி, சாவித்திரி வீரராகவன், வி.ரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, அ.நிர்மலா தேவி, டாக்டர் ஏ.பி.பூர்ணிமா எம்.சி, இரா.கலைச்செல்வி மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

ஜி.சீனிவாசன், ஆர்.மோகனகிருஷ்ணன், ஆர்.செல்வராஜ் (எ) பாபு, பி.சுதர்சன் ஆகியோர் அனைவரையும் வரவேற்கின்றனர்.

---



பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியாவை, சென்னையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் துணைத் தூதர் திருமதி மரியானா எல். நெய்சுலர் (Mrs. Mariana L. Neisuler) அவர்கள் நேற்று முன்தினம் (09.07.2026) மரியாதை நிமித்தமாக ரிப்பன் கட்டட அலுவலகத்தில் சந்தித்தார்.